**ASSOCIATION OF ACCOUNTING TECHNICIANS OF SRI LANKA**

# பரீட்சகர் அறிக்கை

## AA3 பரீட்சை – ஜனவரி 2017

## (AA32) முகாமைக் கணக்கியலும் நிதியும்

---

**<u>மேலோட்டம்</u>:**

இந்த வினாப்பத்திரம் மொத்தம் 100 புள்ளிகளைக் கொண்ட மூன்று பிரிவுகளை கொண்டது.

1. பிரிவு **A:** மொத்தம் 20 புள்ளிகள். <u>நான்கு</u> கட்டாய வினாக்களை உள்ளடக்கியது.
2. பிரிவு **B:** மொத்தம் 30 புள்ளிகள். <u>மூன்று</u> கட்டாய வினாக்களை உள்ளடக்கியது.
3. பிரிவு **C:** மொத்தம் 50 புள்ளிகள். <u>இரண்டு</u> கட்டாய வினாக்களை உள்ளடக்கியது.

**பொதுவான வியாக்கியானம்:**

இந்த வினாப்பத்திரத்திற்கு அனேகமான பரீட்சார்த்திகள் திருப்திகரமாக விடையளிக்கவில்லை. எனினும், சில மாணவர்கள் சிறப்பாக விடையளித்திருந்தனர்.

**பிரிவுவாரியான பெறுபேறு:**

**பிரிவு A:** வினா 3 இனை தவிர ஏனைய வினாக்களுக்கான விடை திருப்திகரமாக இருந்தது.

**பிரிவு B:** விடைகள் திருப்திகரமாக இருக்கவில்லை.

**பிரிவு C:** விடைகள் திருப்திகரமாக இருக்கவில்லை.

---

## <u>பிரிவு A</u>

### வினா இல. 01

இந்த வினாவில் தனிப்பட்ட நிதிபற்றி வினவப்பட்டது. ஒருவருக்கு நல்ல கடனின் (good debt) இரண்டு (02) அனுகூலங்கள் மற்றும் தவறான கடனின் (bad debt) தாக்கங்கள் மூன்றினை (03) நிரற்படுத்துமாறு கேட்கப்பட்டது.

**பெறுபேறு:** திருப்திகரமாக இருந்தது.

**பொதுவான தவறுகள்:**

பரீட்சார்த்திகள் தமது பொது அறிவினை பயன்படுத்தி எழுதிய இந்த வினாவுக்கான விடைகள் ஏற்புடையதாக இருக்கவில்லை. வினா தனிப்பட்ட நிதி சம்பந்தமானதாக இருந்தபோதிலும், அநேக பரீட்சார்த்திகள் வியாபார கடன்பட்டோர் பற்றி எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தொடர்பற்ற □ர்த்தியற்ற விடைகளை எழுதியுள்ளனர். அளித்த விடைகளிலிருந்து அவர்கள் கற்கைப் புத்தகத்தை அல்லது தொடர்புடைய குறிப்புக்களை படிக்காதது தெரிகின்றது.

**பரீட்சகர் ஆலோசனைகள்:**

பரீட்சார்த்திகள் சுயகற்கைப் புத்தகம் மற்றும் மேலதிக புத்தகங்களை வாசித்து தமது அறிவை விருத்திசெய்து இத்தகைய வினாக்களுக்கு விடையெழுத பயிற்சிசெய்தல் வேண்டும்.

## வினா இல. 02

இந்த வினாவில் தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலக் கணிப்பீடு வினவப்பட்டது.

**பெறுபேறு:** திருப்திகரமாக இருந்தது.

**பொதுவான தவறுகள்:**

சில பரீட்சார்த்திகளுக்கு தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தை கணிக்கத் தேவையான போதிய அறிவு இருக்கவில்லை. சிலர் இந்தக் கணிப்பீட்டில் வியாபார சென்மதிகள் காலத்தை கூட்டியிருந்தனர். சிலர் வியாபார வருமதிகள் சேகரிப்புக் கால செய்முறையை காட்டவில்லை.

**பரீட்சகர் ஆலோசனைகள்:**

சுயகற்கைப் புத்தகத்தை நன்கு கற்று கடந்த கால வினாக்களை நன்கு பயிற்சி செய்க. எப்போதும் செயன்முறைகள் மற்றும் கணிப்பீடுகளை தெளிவாக காட்டவேண்டும். சிறிய கணித வழுக்களை தவிர்ப்பதற்கு இருதடவை சரிபார்க்கவும்.

## வினா இல. 03

இந்த வினாவில் தீர்மானம் மேற்கொள்ளலில் விளைவாய்வு (pay-off) அறிவு பரீட்சிக்கப்பட்டது. விருப்பமின்மை அட்டவணை மூலம் மிகை-மிகை மற்றும் குறை-மிகை விருப்பமின்மைத் தீர்வினை இனங்காணுமாறு கேட்கப்பட்டது.

**பெறுபேறு:** மிக மோசமாக இருந்தது.

**பொதுவான தவறுகள்:**

அனேகமான பரீட்சார்த்திகள் இந்தக் கணிப்பீடுகளை மேற்கொள்வதற்கு அவசியமான போதிய அறிவினைக் கொண்டிருக்கவில்லை.

பலர் சரியான முறையினை அறிந்திராது வேறு பல முறைகளை முயற்சித்துள்ளனர்.

**பரீட்சகர் ஆலோசனைகள்:**

கற்கைப் புத்தகத்தை நன்கு வாசித்து, கோட்பாட்டு அறிவினை பெற்றுக்கொண்டு வேறுபட்ட தருநிலைகளின் கீழ் இத்தகைய வினாக்களை பயிற்சிசெய்தல் வேண்டும்.

## வினா இல. 04

இந்த வினாவில் மீள்செலுத்துகை முறையின்கீழ் செயற்திட்ட மதிப்பாய்வுபற்றி வினவப்பட்டது.

**பெறுபேறு:** திருப்திகரமாக இருந்தது.

**பொதுவான தவறுகள்:**

சில பரீட்சார்த்திகள் தவறாக தேய்மானத்தை காசுப்பாய்வில் உள்ளடக்கினர். சிலர் ஒடிவுப் பெறுமதியை கணக்கிற் கொள்ளவில்லை. இன்னும் சில பரீட்சார்த்திகள் மீள்செலுத்துகைக் காலத்தை கணித்தலில் எஞ்சியுள்ள மாதங்களை கவனத்திற் கொள்ளாது, முழு ஆண்டுகளின் எண்ணிக்கையை எழுதியிருந்தனர்.

**பரீட்சகர் ஆலோசனைகள்:**

- இதே வகையான கடந்தகால வினாக்களை பயிற்சி செய்க.
- காசுப்பாய்வில் உள்ளடக்கவேண்டிய மற்றும் உள்ளடக்கக்கூடாத உருப்படிகள் பற்றி தெளிவான அறிவை பெற்றுகொள்ள வேண்டும்.

## பிரிவு B

### வினா இல. 05

இந்த வினாவில் விற்பனை விலை முரண் மற்றும் விற்பனை எல்லைக் கனவளவு முரண் ஆகியவற்றின் பகுப்பாய்வு பரீட்சிக்கப்பட்டது.

**பெறுபேறு:** திருப்திகரமாக இருக்கவில்லை.

**பொதுவான தவறுகள்:**

பரீட்சார்த்திகள் விற்பனை முரண்கள் பற்றிய போதிய அறிவை கொண்டிருக்கவில்லை. அனேக பரீட்சார்த்திகள் விற்பனை எல்லைக் கனவளவு முரண் சூத்திரத்தை தெரிந்திருக்கவில்லை.

அனேக பரீட்சார்த்திகள் தமது கணிப்பீடுகளில் சாதக மற்றும் பாதக முரண்களை குறிப்பதற்கு (+) / (-) குறிகளை சரியாக குறிப்பிட்டிருக்கவில்லை.

பகுதி (b) யின் விடைகள் தவறான சூத்திரம் மற்றும் தவறான பெறுமதிகளை பிரதியீடு செய்த காரணத்தால் தவறானவையாக இருந்தன.

**பரீட்சகர் ஆலோசனைகள்:**

- சூத்திரம் மற்றும் முரண்கள் பற்றிய கோட்பாட்ட அறிவை மேம்படுத்துக.
- கடந்தகால வினாக்களை பயிற்சி செய்க
- முரண்களை கணிப்பதில் (+) / (-) குறிகளை சரியாக கருத்திற் கொண்டு சாதகம் (F) மற்றும் பாதகம் (A) என்பதனை சரியாக குறிப்பிடுக.
- கணித வழுக்களை தவிர்க்குக. .

### வினா இல. 06

இந்த வினாவில் நீண்டகால நிதியளிப்பு மூலங்கள், மூலதனக் கிரய மற்றும் நிறையேற்றிய சராசரி மூலதனக் கிரய கணிப்பீடு பற்றிய அறிவு ஆகியன பரீட்சிக்கப்பட்டது.

**பெறுபேறு:** திருப்திகரமாக இருக்கவில்லை.

**பொதுவான தவறுகள்:**

அனேக பரீட்சார்த்திகள் வினாவை முறையாக விளங்கியிருக்கவில்லை. வினாவின் பகுதி (a) யில் நீண்டகால மூலதன மூலங்கள் பற்றி வினவப்பட்டபோதிலும் அனேக பரீட்சார்த்திகள் முறையாக பதிலளிக்கவில்லை. பகுதி (b) க்கான விடைகள் திருப்திகரமாக இருந்தன.

பகுதி C – மீட்கத்தகு தனிச்சங்களின் மூலதனக் கிரயத்தை IRR முறை மூலம் கணிப்பதற்கு பதிலாக அனேக பரீட்சார்த்திகள் தொடர்பற்ற பல்வேறு முறைகளை பயன்படுத்தி இருந்தனர்.

பகுதி D – அனேக பரீட்சார்த்திகள் WACC இனை கணிப்பது தொடர்பில் அடிப்படை அறிவினை கொண்டிராது, தொடர்பற்ற சூத்திரம் மற்றும் முறைகளை கடைப்பிடித்துள்ளனர்.

**பரீட்சகர் ஆலோசனைகள்:**

- கோட்பாட்டு வினாக்களுக்கு குறிப்பான தொடர்புடைய விடைகளை எழுதவும்.
- இதேபோன்ற வினாக்கள் அடிக்கடி பரீட்சிக்கப்படுவதனால், கடந்த கால வினாக்களை பயிற்சி செய்யவும்.
- கற்கைப் புத்தகத்தினை நன்கு கற்று இந்தப் பகுதி தொடர்பில் அதிகளவு வினாக்களை பயிற்சி செய்யவும். மூலதன மூலங்கள் மற்றும் மூலதனக் கிரயம் பற்றி கோட்பாட்டு ரீதியாக நல்ல அறிவினை பெற்றுக்கொள்ளவேண்டும்.

## வினா இல. 07

இந்த வினா முதலீட்டு மதிப்பாய்வு பற்றியது. அதன்படி, காசுப்பாய்வுகளை இனங்காணல், நிகர இற்றைப் பெறுமதியை கணித்தல், மற்றும் NPV யின் அடிப்படையில் எவ்வாறு தீர்மானம் மேற்கொள்வது என்பவை பற்றி பரீட்சிக்கப்பட்டது.

**பெறுபேறு :** மிக மோசமாக இருந்தன..

**பொதுவான தவறுகள்:**

- சில பரீட்சார்த்திகள் வரிக் கொடுப்பனவு தொடர்பில் கணிப்பீடுகளை தரவில்லை.
- சில பரீட்சார்த்திகள் வரிக்கணிப்பீட்டில் ஒடிவுப்பெறுமதியை கணக்கில் எடுக்கவில்லை.
- தொழிற்படுமூலதனம் செயற்திட்ட ஆரம்பத்தில் தேவைப்படுமென தெளிவாக கூறப்பட்ட போதிலும் சில பரீட்சார்த்திகள் அதனை ஆண்டு 1 இல் எடுத்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் NPV க்கு பதிலாக IRR இனை கணித்திருந்தனர்.
- அனேக பரீட்சார்த்திகள் பகுதி (a) யின் அடிப்படையில் பரிந்துரையை எழுதவில்லை.

**பரீட்சகர் ஆலோசனைகள்:**

- இதேபோன்ற வினாக்கள் கிட்டத்தட்ட எல்லாப் பரீட்சைகளிலும் பரீட்சிக்கப்படுவதால், கடந்தகால வினாக்களை நன்கு பயிற்சி செய்க.
- மூலதன மதிப்பாய்வில் காசு உட்பாய்வு மற்றும் காசு வெளிப்பாய்வு ஆகியவற்றின் குறிகளை கவனமாக குறிப்பிடுக.

## <u>பிரிவு C</u>

## வினா இல 08

இந்த வினா பலவரையறைக் காரணிகளைக் கொண்ட, ஏகபரிமாண திட்டமிடலை பயன்படுத்தி வரைபட முறையில் தீர்மானம் மேற்கொள்வது தொடர்புபட்டது. இங்கு உத்தம உற்பத்திக் கலவையின் மொத்தப் பங்களிப்பை கணிக்குமாறு கேட்கப்பட்டது.

**பெறுபேறு:** திருப்திகரமாக இருக்கவில்லை. .

அனேகமாக எல்லாப் பரீட்சார்த்திகளும் பகுதி (a) க்கு முழுப் புள்ளிகள் பெற்றனர். ஏனைய பகுதிகளுக்கான விடைகள் திருப்திகரமாக இருக்கவில்லை.

- அனேகமான பரீட்சார்த்திகள் உத்தம உற்பத்திக் கலவையை இனங்காண ஏதுவாக வரைபடத்தினை வரைந்திருக்கவில்லை.

- பலர் மணித்தியாலத்தை நிமிடங்களாக மாற்றுவதற்கு தவறியிருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் வரைபடத்தில் கேள்வி வரையறையை வரையவில்லை.
- சிலர் மறைப்பெறுமதியின்மை வரையறையை குறிப்பிடவில்லை.
- அனேக பரீட்சார்த்திகள் வினாவை நன்கு வாசித்து விளங்கிக்கொள்ளவில்லை. இந்த வினாவுக்கு பயன்படுத்த வேண்டிய முறையை அவர்கள் தெரிந்திருக்கவில்லை.
- சில மாணவர்கள் ''இலும்பார்க்க கூடியது அல்லது அதற்குச் சமன்'' அல்லது ''இலும் பார்க்க குறைந்தத அல்லது அதற்குச் சமன்'' எனும் குறியீடுகளை எழுதவில்லை.
- அனேகமானோர் சாத்தியப் பிரதேசத்தினை வரைபடத்தில் குறித்துக் காட்டவில்லை.

**பரீட்சகர் ஆலோசனைகள்:**

- பரீட்சார்த்திகள் முறையாக, ''இலும்பார்க்க கூடியது அல்லது சமன்'', ''இலும் பார்க்க குறைந்தது அல்லது சமன்'' எனும் குறியீடுகளை பிரயோகித்தல் வேண்டும்.
- பரீட்சார்த்திகள் உரிய அத்தியாயங்களை நன்கு வாசித்து இதேபோன்ற வினாக்களை பயிற்சி செய்தல் வேண்டும்.
- இத்தகைய வினாக்களுக்கு விடையளிக்க, பரீட்சார்த்திகள் ஏகபரிமான திட்டமிடல் படிமுறைகள் சகலவற்றையும் ஒழுங்காக பின்பற்றி விடையெழுத வேண்டும்.

## வினா இல. 09

பகுதி (A): இந்த வினாவில் பாதீட்டு கட்டுப்பாட்டு முறைமையின் நோக்கம் மற்றும் நிலையான, நெகிழ்வுப் பாதீடுகளை பயன்படுத்தி பாதீட்டுக் கட்டுப்பாட்டுக் கூற்றினை தயாரிப்பது எப்படி என்பன பற்றி வினவப்பட்டது..

பகுதி (B): இதில் முரண்களை கணித்து தொழிற்பாட்டு கணக்கிணக்கக் கூற்றினை தயாரிப்பது பற்றி வினவப்பட்டது.

**பெறுபேறு:** திருப்திகரமாக இல்லை.

**பொதுவான தவறுகள்:**

பகுதி (A) (a) –அனேக பரீட்சார்த்திகள் தொழிற்பாட்டுக் கூற்றை முறையாகத் தயாரிக்கவில்லை.

அனேகமான பரீட்சார்த்திகள் நெகிழ்ச்சிப் பாதீட்டினை தயாரிக்காது, தரப்பட்ட மூலப் பாதீடு மற்றும் உண்மைப் பெறுபேற்றினை ஒப்பிட்டு முரண்களை கணித்திருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் கணிப்பிடப்பட்ட முரண்கள் சாதகமானவையா அல்லது பாதிகமானவையா என குறிப்பிடத் தவறியிருந்தனர்.

பகுதி (A) (b) – மிகக் குறைந்த எண்ணிக்கையான பரீட்சார்த்திகளே பாதீட்டு கட்டுப்பாட்டின் நோக்கங்களை சரியாக இனங்கண்டு விபரித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் நோக்கங்களை இனங்கண்டபோதிலும் அந்த நோக்கங்களை விபரிக்க தவறியிருந்தனர். வினாவில் அந்த நோக்கங்களை விபரிக்குமாறு தெளிவாக கேட்கப்பட்டிருந்தது.

பகுதி (B) (a) & (b) – அனேக பரீட்சார்த்திகள் சூத்திரத்தினை எழுதியபோதிலும், பெறுமதிகளை சரியாக பிரதியிட தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் நியம சூத்திரங்களுக்குப் பதிலாக தவறான முறைகளில் முரண்களை கணிக்க முற்பட்டனர். இதன் காரணமாக அனேக விடைகள் தவறாக இருந்தன.

சிலர் முரண்களின் சாதக, பாதகங்களை சரியாக குறிப்பிடாது புள்ளிகளை இழந்தனர்.

பகுதி (B) (c) – சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட முரண்களை சாதக மற்றும் பாதக நிரல்களின் கீழ் குறிப்பிட்டதை தவிர உண்மையான பங்களிப்பு மற்றும் மீளாக்கப்பட்ட பாதிட்ட பங்களிப்பு ஆகியவற்றை கணித்திருக்கவில்லை.

சிலர் தொழிற்பாட்டுக் கூற்றில் வருமான முரண் ரூபா (207,000) இனை எடுக்கத் தவறினர்.

**பரீட்சகர் ஆலோசனைகள்:**

- பரீட்சார்த்திகள் வேறுபட்ட தருநிலைகளில் சூத்திரம் மற்றும் முரண்களை பயிற்சி செய்யவேண்டும்.
- சகல செயன்முறைகளையும் காட்டுதல் வேண்டும்.
- முரண்பகுப்பாய்வில் சரியான பிரயோகத்துடன் சூத்திரங்களை எழுதி பெறுமதிகளை பிரதியிட்டு முன்னிலைப்படுத்த வேண்டும்.
- பரீட்சார்த்திகள் நம்பிக்கையினை பெறுவதற்கு சுயகற்கைப் புத்தகம் மற்றும் பயிற்சிப் புத்தகத்தில் வேறுபட்ட வினாக்களை பயிற்சிசெய்தல் வேண்டும்.
- ஒழுங்குமுறையாக விடைகளை முன்வைத்தல் வேண்டும்.

- - -

**<u>பரீட்சார்த்திகள் தெளிவு மட்டத்தினை விருத்திசெய்ய கவனத்திற் கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்</u>**

1. பாடத்திட்டத்தின் உள்ளடக்கத்தை நன்கு வாசித்து ஒவ்வொரு பகுதியிலும் எதிர்பார்க்கும் அறிவுமட்டம் பற்றி விளங்கிக்கொள்ள வேண்டும்.

2. வினாக்களை கவனமாக வாசித்து விளங்கிக்கொண்டு விடையெழுதும்போது கணிப்பீடு தொடர்புபட்ட உரிய செய்முறைகள் தெளிவாக காட்டுதல் வேண்டும்.

3. எடுகோள்கள் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிட வேண்டும்

4. தெளிவான கையெழுத்து, எண்களை தெளிவாக எழுதுதல் பற்றி கவனம் செலுத்துதல் வேண்டும். விடைத்தாள்களை கையளிக்க முன்னர் வினா இலக்கங்கள் சரியாக எழுதப் பட்டுள்ளனவா என்பதனை உறுதிசெய்ய வேண்டும்.

5. வினாத்தாளில் தரப்பட்ட அறிவுறுத்தல்களை சரியாக கடைப்பிடிக்க வேண்டும்.

6. கடந்தகால வினாத்தாள்களையும் மாதிரி விடைகளையும் நன்கு விளங்கிக் கொள்வது அறிவை மெருகூட்டி, திறமையை வளர்த்துக்கொள்ள உதவும். ஒரேவகை வினாக்கள் மீண்டும் மீண்டும் பரீட்சிக்கப்படுவதனால், இவ்வாறு செய்தல் அனுகூலமானதாகும்.

7. சுயகற்கைப் புத்தகத்தினை நன்கு வாசித்தறிந்து அதில் தரப்பட்டுள்ள உதாரணங்களை பயிற்சி செய்தல் மிகவும் முக்கியமானதாகும்.

8. உரிய பாடம் தொடர்புபட்ட புத்தகங்கள், கட்டுரைகள், குறிப்புக்கள் மற்றும் ஏனைய வாசிப்பு ஆவணங்களை வாசித்தல் வேண்டும்.

9. பரீட்சைகளில் கால முகாமைத்துவம் முக்கியம். ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் அவை ஒவ்வொன்றிற்கும் எடுக்கவேண்டிய நேரத்தை மதிப்பிட்டு அதற்கமைய விடையெழுத நேரம் செலவிடுதல் வேண்டும்.

10. உரிய முறையில் தயார்ப்படுத்தி சித்தியடையமுடியும் என்ற நம்பிக்கையுடன் பரீட்சைக்கு தோற்றவேண்டும்.

- * * * -